தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 27-5-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலை நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் சொக்கனூர் ஊராட்சியில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் 23-5-2015 முதல் 29-5-2015 வரை நடைபெறுகிறது.

அதில் மூன்றாம் நாள் (25-5-2015) காலை 10.00 மணியளவில் சொக்கனூரில் கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமில் உள்ளூர் பிரமுகர்கள் திரு. சிவமுருகேசன், திரு. நடராஜ், திரு. முத்து மாணிக்கம் மற்றும் திருமதி. வேலுமணி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இம்முகாமில் 51 ஆடுகள் உட்பட மொத்தமாக 61 கால்நடைகள், கால்நடை மருத்துவர் திரு. ரவிச்சந்திரன் அவர்களால் பரிசோதிக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டது.

மேலும் முத்துக்கவுண்டனூர் பள்ளி வளாகத்தையும், சொக்கனூர் சாலையோரப் பகுதிகளையும் மாணவ-மாணவிகள் தூய்மைப்படுத்தினர்.

சட்டக்கல்புதூரில் "பார்த்தீனியம் ஒழிப்பு"– செயல் விளக்கம் பொதுமக்களுக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உழவியல் துறை பேராசிரியர் முனைவர். பிரபாகரன் அவர்களால் விளக்கப்பட்டு, அவர்களின் சந்தேகங்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும் "பார்த்தீனியம் ஒழிப்பு" விழிப்புணர்வுப் பேரணி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர். பிரபாகரன் மற்றும் உதவிப் பேராசிரியர் முனைவர். ஜானகி அவர்களால் வீரப்பக்கவுண்டனூரில் தொடங்கி வைக்கப்பட்டுச் சொக்கனூரில் நிறைவுற்றது. அதில் பார்த்தீனியம் ஒழிப்பு குறித்து பதாகைகள் ஏந்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். அதனைத் தொடர்ந்து நடந்த கருத்தரங்கில் "உடலும் உணவும்" என்னும் தலைப்பில் மருத்துவர் சிங்காரவேலு (எம் டி. மாற்று மருத்துவம்) சிறப்புரை வழங்கினார்.

இறுதியாக "சூரிய ஒளி மற்றும் உயிர்சக்தி பயன்பாடு" என்ற தலைப்பில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிர்சக்தி துறை உதவிப்பேராசிரியர் முனைவர். மகேந்திரன் அவர்கள் சிறப்பிரையாற்றனார். அவர் தனது சிறப்புரையில் பொதுமக்களுக்கு மேம்படுத்தப்பட்ட அடுப்புகள், தீனபந்து சாண எரிவாயு கலன் பற்றியும் சூரிய உலர்த்தி பற்றியும் விளக்கினார். இதுகுறித்த நோட்டீசு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

நான்காம் நாளன்று (26-5-2015) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மருத்துவக் குழு, துளசி பார்மஸிஸ் இந்தியா பிரைவேட் லிமிட்டெட் மற்றும் சிப்லா பார்மசூட்டீகல்ஸ் ஆகியவை இணைந்து நடத்திய பொது மருத்துவ முகாமானது முத்துக்கவுண்டனூரில் நடைபெற்றது. இம்முகாமானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மருத்துவமனை தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர். திருமதி அ. அருள்மொழி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இம்முகாமின் மூலம் 65 குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இம்முகாமை சொக்கனூர் ஊராட்சித் தலைவர் திருமதி. மணி சிவமுருகேசன் மற்றும் பிரமுகர் திரு. சிவமுருகேசன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இம்முகாமில் இரத்தத்தின் சர்க்கரை அளவு, இரத்த அழுத்தம், நுரையீரலில் கரியமில வாயுவின் அளவு ஆகியவை தகுந்த கருவிகளால் பரிசோதிக்கப்பட்டது.

மேலும் நடைபெற்ற கால்நடை மருத்துவ முகாமில், கால்நடை மருத்துவர் ரவிசந்திரன் அவர்கள் 77 ஆடுகள் உட்பட 86 கால்நடைகளை பரிசோதித்து மருந்துகள் வழங்கினார். அவ்வூரில் பள்ளி மற்றும் கோவில் வளாகம் மாணவ மாணவிகளால் தூய்மைப்படுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக முத்துக்கவுண்டனூரில் நடைப்பெற்ற கருத்தரங்கத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பயிர் வினையியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர். சீனிவாசன் அவர்கள் தென்னை குறித்த செயல்விளக்கம் அளித்தார். இதில் 25 விவசாயிகள் பங்குப் பெற்றனர்.

அதன் பின்னர் புகையிலை எதிர்ப்புப் பேரணியானது முத்துக்கவுண்டனூரில் நடைப்பெற்றது. அதில் ‘‘புகையிலையை ஒழிப்போம், புற்றுநோயை தடுப்போம், நுரையீரலைக் காப்போம்’’ போன்ற பதாகைகளை கையில் ஏந்தி 300 மாணவ மாணவியர் கோஷமிட்டு சென்றனர். இப்பேரணியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர். லதா துவக்கி வைத்தார். இதில் திட்ட அலுவலர்கள் முனைவர். சக்திவேல், முனைவர். ஹேமபிரபா, முனைவர். குரு, முனைவர். வள்ளியம்மை, துளசி பார்மஸி மக்கள் தொடர்பு அதிகாரி திரு. கிரிராஜ் மற்றும் சிப்லா பார்மசூட்டீகல்ஸ் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

இறுதியாக அவ்வூர் சிறார்களின் திறமைகளை ஊக்கப்படுத்தும் விதமாக கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. சிறார்கள் யோகா, ஆடல், பாடல் போன்ற திறமைகளை வெளிக்கொணர்ந்தனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்